டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 163 7.12.2025 SUNDAY KARTHIGAI : 20 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 163 7.12.2025 ஞாயிற்றுக்கிழமை கார்த்திகை : 20 விலை : ரூ.5/–

3 திருப்பூரில் ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரின் பிறந்தநாள் விழா

4 தமிழகத்தில் தேஜ கூட்டணி ஆட்சி; ராமர் ஆட்சி மலர வேண்டும்: நயினார் நாகேந்திரன்

2 திசையன்விளையில் மகளிர் காவல் நிலையம் அமைக்க பாரத இந்து மக்கள் கட்சி கோரிக்கை

# மதுரையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை ஏராளம் முதல்வரின் பதிவும், மக்களின் எதிர்பார்ப்பும்



மதுரை: டிச.7-

கடந்த சில நாட்களாக திருப்பரங்குன்றம் தீப விவகாரம் நாடு முழுவதும் கவனம் பெற்றுள்ளதால் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் தங்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில், ''மாமதுரைக்குத் தேவை வளர்ச்சியா அல்லது அரசியலா? என மக்கள் முடிவு செய்வார்கள்.

மெட்ரோ ரயில், எய்ம்ஸ், புதிய தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகள். இவைகள்தான் மாமதுரையின் வளர்ச்சிக்காக அங்கு வாழும் மக்கள் கேட்பது'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அவரது இந்த கருத்துக்கு திமுக மற்றும் கூட்டணி கட்சியினரிடையே வரவேற்பு கிடைத்தாலும், திமுக ஆட்சிக்கு வந்து கடந்த நான்கரை ஆண்டுகளில் மற்ற நகரங்களை போல் மதுரையில் வேலைவாய்ப்புகளை தரும் திட்டங்களை தொடங்கவில்லை என்றும், முதல்வரின் பட்டியலில் மதுரை விமான நிலையம் ஏன் இடம் பெறவில்லை என்றும் மதுரையைச் சேர்ந்த பல்வேறு தரப்பினர் சமூக வலைதளத்தில் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இதுகுறித்து மதுரை உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்குழும நிர்வாகி டாக்டர் ஜெ.மகேந்திரவர்மன் கூறியதாவது: கடந்த காலத்தில் தொழில் முதலீடுகளும், தொழிற்சாலைகளும், சென்னை, காஞ்சிபுரம் போன்ற நகரங்களை சுற்றியே வந்து கொண்டிருந்தன. தற்போதைய திமுக ஆட்சியில் தூத்துக்குடி, ஓசூர், திருச்சி போன்ற மற்ற நகரங்களுக்கும் தொழில் முதலீடுகளும், மற்ற கட்டமைப்பு வசதிகளும், வேலைவாய்ப்பு திட்டங்களும் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

ஆனால் இந்த நான்கரை ஆண்டுகால திமுக ஆட்சியில் புதிதாக வேலைவாய்ப்பு திட்டங்கள், உற்பத்தி நிறுவனங்களை மதுரைக்கு கொண்டு வரவில்லை. இதே கருத்து கடந்த ஆண்டு சென்னையில் நடந்த முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டது.

மதுரையில் கலைஞர் நூலகமும், ஜல்லிக்கட்டு மைதானமும் கட்டியதையே பெரும் சாதனையாக கூறுகின்றனர். இவை நல்ல திட்டங்கள்தான் என்றாலும் பெரிய அளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தாது. திமுக ஆட்சியில் ஆரம்பத்தில் அறிவித்த டைடல் பார்க் திட்டம் தற்போதுதான் கட்டுமானப் பணி தொடங்கி நடக்கிறது. செயல்படும்போதுதான் வேலைவாய்ப்பு கிடைக்கும் விவரம் தெரியவரும்.

விமான நிலைய விரிவாக்கம் மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கு தேவையான நிலங்கள் 2 வாரங்களில் கையகப்படுத்தி ஒப்படைக்கப்படும் என முன்பு நிதி அமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன் மட்டுமின்றி தமிழக அரசும் உறுதி அளித்தது. இதுவரை முழுமை பெறவில்லை. அதுபோல் எய்ம்ஸ் திமுக ஆட்சிக்கு வந்ததும் தொடங்கப்பட்டுவிடும் என்று பிரச்சாரத்துக்கு மதுரை வந்த துணை முதல்வர் உதயநிதி தெரிவித்தார். ஆனால், தற்போது வரை கட்டுமானப் பணிதான் நடக்கிறது.

மெட்ரோ ரயில் திட்ட அறிக்கையில் போதுமான விவரங்களை வழங்கவில்லை, என்று மத்திய அரசு திருப்பி அனுப்பியதாக கூறப்படுகிறது. மதுரையின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் முக்கியமான இந்த 3 திட்டங்களிலும் மத்திய, மாநில அரசுகள் ஒருவரையொருவர் குறை சொல்லியே கடந்த நான்கரை ஆண்டுகளை போக்கி விட்டனர்.

அதுபோல் மதுரை மாநகரைத் தாண்டி, புறநகர், கிராமங்களிலும் சாலை வசதி இன்னும் மேம்பாடு அடையவில்லை. மாநகரின் சாலை திட்டங்களை மேம்படுத்த சிறப்பு திட்டங்கள் இல்லை. இப்படி மதுரை மாநகரில் தீர்க்கப்பட வேண்டிய மக்கள் பிரச்சினைகள் பல இருக்கின்றன. மதுரைக்கு புதிய ரயில் வழித்தடங்களை கேட்டுப் பெற முடியவில்லை.

குட்லாடம்பட்டி அருவியில் சாதாரண சீரமைப்பு பணிகளைச் செய்ய 8 ஆண்டுகளாக அரசால் முடியவில்லை. இவையெல்லாம் அரசியல் கட்சிகளுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரியவில்லையா? இந்த கோரிக்கைகளுக்காக தொடர் போராட்டங்களை மேற்கொள்ளவோ, குரல் கொடுக்கவோ யாரும் முன்வரவில்லை.

மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்தாமல் விமான நிலையத்துக்கு பெயர் சூட்டும் அரசியல், சிலை திறப்பு அரசியல், சாதி, மதம், கோயில் சார்ந்த அரசியல் பிரச்சினைகளை எழுப்பி குளிர்காய்கின்றனர். மதுரை என்றாலே அரசியல் மாநாட் டுக்கும், சினிமா எடுப்பதற்கும்தான் என்று நினைக்கின்றனர். இன்னும் எத்தனை காலம்தான் மதுரை மக்கள் உண்மையான வளர்ச்சிக்காக ஏங்கி கிடக்க வேண்டும் என்பது தெரிய வில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



## கொண்டையம்பட்டி கிராமத்தில் அதிமுக சார்பில் பாக முகவர் மற்றும் ஆலோசனை கூட்டம்

அலங்காநல்லூர்.
டிச.07.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கொண்டையம்பட்டி கிராமத்தில் அதிமுக சார்பில் பாக முகவர் மற்றும் ஆலோசனைக் கூட்டம் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில்

நடைபெற்றது. இதில் முன்னாள் முப்பெரும் துறை அமைச்சரும் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவருமான ஆர்.பி.உதயகுமார் கலந்துகொண்டு நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி

சிறப்புரையாற்றினார்.

அவர் பேசியதுகடந்த கால அதிமுக ஆட்சியில் புரட்சித்தலைவி ஜெயலலிதா பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வழங்கினார் அதைத் தொடர்ந்து நான்காண்டு சிறப்பான ஆட்சி செய்த எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வழி நடத்தினார் அதேபோன்று வரும் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமையும் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக அரியணை ஏறுவார் என்று தெரிவித்தார்.பின்னர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வெற்றிவேல் வக்கீல் திருப்பதி, வாடிப்பட்டி ராஜேஷ் கண்ணா முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசன், கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் காளிதாஸ் கொரியர் கணேசன், மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன்,

ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத்,மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ஜெயச்சந்திர மணியன்,விவசாய அணி குமார்,கிளைச் செயலாளர் பாண்டுரங்கன், அம்மாபேரவை மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன்,மற்றும் திருமங்கலம் ராமகிருஷ்ணன்,

மாவட்ட பிரதிநிதி முரளி, வார்டு செயலாளர் சுந்தர்ராகவன், மாவட்ட மகளிரணி செயலாளர் லெட்சுமி, துணை செயலாளர் சாந்தி,உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சவுமியாவின் உரிமை மீட்பு பயணம் துவங்குகிறது

சென்னை, டிச.7-

'தமிழக மக்கள் உரிமை மீட்பு பயணம்' என்ற பெயரில், பா.ம.க., தலைவர் அன்புமணி, தமிழகம் முழுதும் 108 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து, அவரது மனைவி சவுமியா, உரிமை மீட்பு பயணம் மேற்கொள்கிறார்.

அதிகாரத்தில் பெண்களுக்கு சம வாய்ப்பு, மதுவால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான பெண்களின் உரிமை, வன்முறை இல்லா வாழ்வுக்கான மகளிர் உரிமை உள்ளிட்ட, 10 உரிமைகளை முன்வைத்து, சவுமியா பிரசாரம் செய்ய இருப்பதாக, பா.ம.க., அறிவித்துள்ளது.

## ஆத்தூர் தொகுதி மக்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பொங்கல் பரிசு விநியோகம் : பொதுமக்கள் பாராட்டு

### எங்களின் சகோதரனாய் பொங்கல் பரிசு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு என்றும் உறுதுணையாய் இருப்போம் கிராமப்புற பெண்கள் உறுதி



சின்னாளபட்டி டிச.7

ஆத்தூர் தொகுதி மக்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பொங்கல் பரிசு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எங்களின் சகோதரனாய் பொங்கல் பரிசு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு என்றும் உறுதுணையாய் இருப்போம் என கிராமப்புற பெண்கள் உறுதிபட பேசினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை தொகுதி மக்களோடு மக்களாக பழகிவருவதால் அவரை தொகுதி மக்கள் அவரது பெயரை உச்சரிக்காமல் ஐ.பி. என்று செல்லமாக அழைப்பதுடன் தென்பாண்டி சிங்கம் என அனைத்து இடங்களிலும் சொல்வார்கள். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொகுதி மக்களுக்கு தீபாவளி அன்பளிப்பு, பொங்கல் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார். இவ்வருடம் திமுகவின்; 75வது ஆண்டுவிழா, துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் விழா, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தொகுதி மக்களுக்கு எவர்சில்வர் பாத்திரம் (சம்படம்) வழங்கி வருகிறார். இதற்கு தொகுதி மக்கள் மத்தியில் குறிப்பாக பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளார் மணி தலைமையில், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ் மற்றும் முருநெல்லிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் சின்னு (எ) முருகன், துணைத் தலைவர் செந்தில், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் இராஜேஸ்வரி தமிழ்செல்வன் ஆகியோர் பெண்களுக்கு வீடு தவறாமல் வழங்கி வருகின்றனர். கிராமப்புற பெண்கள் ஆர்வமுடன் போட்டி போட்டுக்கொண்டு பாத்திரங்களை வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து முருநெல்லிக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த பெண்கள் கூறுகையில், தமிழக முதல்வர் ஸ்டாலின் ஐயா எங்களுக்கு மாதந்தோறும் மகளிர் உரிமைத் தொகை வழங்கிவருகிறார். ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அய்யா அவர்கள் பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல் உட்பட விஷேச நாட்களில் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அவருக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம் என்றனர். நிகழ்ச்சியில் வாக்கு சாவடி நிலை முகவர் ராஜேந்திரன், கிளைச் செயலளார்கள் அய்யப்பன், மோகன், சாமி முனியப்பன், முத்துராஜ், சேகர், சத்தியமூர்த்தி, முருகன், செல்வம், சுந்தரேசன், சாலையூர் நால்ரோடு ஆறுமுகம் உட்பட திமுக நிர்வாகிகள், திமுக இளைஞரணியினர், மகளிர் அணியினர் பலர் கலந்துகொண்டனர்.



■ குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் ஆதிதிராவிடர் நல நலக்குழு ஏற்பாட்டில் புரட்சியாளர் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 69 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கொங்கல் நகர் பஸ் ஸ்டாப்பில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவெள்ளி முரளி அவர்கள் தலைமையில் அம்பேத்கர் அவர்கள் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் அவை தலைவர் ஜெயபால், துணைச் செயலாளர் நித்தியானந்தம், பொருளாளர் முருகானந்தம், துணை செயலாளர் சுரேஷ் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.



## திசையன்விளையில் மகளிர் காவல் நிலையம் அமைக்க பாரத இந்து மக்கள் கட்சி கோரிக்கை

திசையன்விளை, டிச.07-

நெல்லை மாவட்டம் திசையன்விளை நகர பாரத இந்து மக்கள் கட்சி செயற்குழு கூட்டம் நகர தலைவர் உச்சி மாகாளி தலைமையில் நடந்தது .மாவட்ட தலைவர் ராஜா ,ஒன்றிய தலைவர் காமராஜ் ,ஒன்றிய திருக்குலத்தோர் அணி தலைவர் இசக்கியப்பன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் பரமசிவன், மாவட்ட விவசாய அணி செயலாளர் லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக மாநில தலைவர் ஆர் .பி .எஸ். கார்த்தீசன் கலந்து கொண்டு பேசினார்

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திசையன்விளை அஞ்சல் அலுவலகத்தில் ரயில்வே முன்பதிவு செயல்பாடு தொடர்ந்து நடைபெற வேண்டும், திசையன்விளை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தவேண்டும் ,திசையன்விளை பேரூராட்சி பகுதிகளில் குடிநீருக்காக தோண்டப்பட்டசாலைகளை உடனடியாக சீர்படுத்தவேண்டும் , திசையன்விளையில் இருந்துதிருவ னந்தபுரத்திற்கு அரசு பேருந்து இயக்கிட வேண்டும், திசையன்விளை நகரில் போக்குவரத்தை சீர்படுத்த போக்குவரத்து காவலர்களை நியமிக்க வேண்டும், மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டும், திசையன்விளை பஜாரில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், திசையன்விளையில் இருந்து புறப்படும் ஆம்னி பேருந்து களை பைபாஸ் சாலையில் இருந்து இயக்கிட வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



## மேற்கு ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலை அருகே தவெக சார்பில் மாமேதை புரட்சியாளர் டாக்டர். அம்பேத்கர் 69 ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிப்பு

ஒட்டன்சத்திரம், டிச.7-

தமிழக வெற்றிக் கழகம் திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகரம் சார்பாக 06.12.2025 அன்று காலை 10.30 மணிஅளவில் தமிழக வெற்றிக் கழக தலைவர்களின் ஒருவரான புரட்சியாளர் டாக்டர். அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 69வது நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.கார்த்திக்ராஜன் அவர்கள் தலைமையில் நகர செயலாளர் எம். குருஅருண், ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜேஷ் கண்ணன் அவர்களின் ஏற்பாட்டில் ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலை அருகில் டாக்டர். அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட தலைமை நிர்வாகிகள் மற்றும் மாவட்ட சார்பு அணி தலைமை நிர்வாகிகள் மற்றும் நகர தலைமை நிர்வாகிகள் இளைஞரணி, ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றிய பொருளாளர் ஃபாஸ்ட் ஃபுட் ராஜா மற்றும் நகர இளைஞர் அணி செயலாளர் புல்லட்செல்வா கிழக்கு ஒன்றியம் ,மேற்கு ஒன்றியம் தலைமை நிர்வாகிகள் மற்றும் வார்டு செயலாளர்கள் கிளை செயலாளர்கள் வார்டு நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.



■ உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு தொடர் நிகழ்வாக திருப்பூர் மாவட்டம் அய்யம்பாளையம் பகுதியில் வசித்து வரும் 25க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மகிழ்வித்து மகிழ் அறக்கட்டளை - உடுமலை பிற உயிர் நேசி சார்பில் 5 கிலோ அரிசி சிப்பம் வழங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது இதில் மகிழ்வித்து மகிழ் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் லீலா ஜெகன் மற்றும் நிறுவனச் செயலாளர் சிவசங்கரன் மற்றும் பலர் பங்கேற்றனர்...



## சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரின் நினைவு தினம்

சிவகங்கை, டிச.07-


சிவகங்கை மாவட்டம் சிவகங்கை சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரின் நினைவு தினம் இன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு இடங்களிலும் அவரது திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரின் நினைவு தினத்தையொட்டி சிவகங்கை இளையான்குடி சாலையில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு நகர் மன்ற தலைவர் சி எம் துரை ஆனந்த் அவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள்,கழக உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலைக்கு பூ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்,,,.

## சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் 70 ஆவது நினைவு நாளையொட்டி அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை: திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் சீனிவாசன் தலைமையில் நிர்வாகிகள் பங்கேற்பு



திருச்சி, டிச.07-

சட்ட மேதை டாக்டர் அம்பேத்கரின் 70ஆவது நினைவு தினத்தை ஒட்டி திருச்சி மாநகர் மாவட்ட அதிமுக சார்பில் மாவட்ட செயலாளர் சீனிவாசன் தலைமையில் திருச்சி பேருந்து நிலையம் அருகே உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் வனிதா, பத்மநாதன், திருச்சி மாநகராட்சி அதிமுக தலைவர் கவுன்சிலர் அம்பிகாபதி, மாவட்ட இளைஞரணி செயலாளர் ரஜினிகாந்த், ஐடி பிரிவு செயலாளர் வெங்கட் பிரபு, சிறுபான்மை பிரிவு அப்பாஸ், கலை இலக்கியப் பிரிவு ஜான் எட்வர்டு குமார், இளைஞர் பாசறை செயலாளர் லோகநாதன், பேரவை இணை செயலாளர் வழக்கறிஞர் தினேஷ் பாபு, பொன்னார் பேரவை துணை செயலாளர் கருமண்டபம் சுரேந்தர், பேரவை மாவட்ட தலைவர் எனர்ஜி அப்துல் ரகுமான், பகுதி செயலாளர்கள் என்.எஸ் பூபதி, அன்பழகன், ரோஜர், வாசுதேவன், சிறுபான்மை பிரிவு தென்னூர் ஷாஜகான், முன்னாள் மாவட்ட மகளிர் அணி செயலாளர் தமிழாசி சுப்பையா, முன்னாள் மாவட்ட மருத்துவர் அணி சுப்பையா பாண்டியன், இளைஞர் அணி சில்வர் சதீஷ்குமார், மாணவரணி துணைத் தலைவர் வழக்கறிஞர் சேது மாதவன், மகளிர் அணி துணைத்தலைவி வழக்கறிஞர் புவனேஸ்வரி, மகளிர் அணி இணை செயலாளர் ஜெயஸ்ரீ, இளைஞர் அணி டி.ஆர்.சுரேஷ் குமார், எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர் வாழைக்காய் மண்டி சுரேஷ்குமார், எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் அப்பா குட்டி, ஐடி பிரிவு கதிரவன், புத்தூர் ரமேஷ், விஷ்வா, டிபன் கடை கார்த்திகேயன், வசந்தம் செல்வமணி, எடமலைப்பட்டி புதூர் வசந்தகுமார், சுரேஷ் குப்தா, எஸ்பிஎம் அறக்கட்டளை டிரஸ்டி தீபா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## மருதமலை அருள்மிகு ஸ்ரீ வள்ளி அம்மன் திருக்கோவில் ஒன்பதாம் ஆண்டு விழா இன்று துவக்கம்

கோவை, டிச.07-

மருதமலை அடிவாரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வள்ளி அம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக ஒன்பதாம் ஆண்டு விழா இன்று துவங்குகிறது .

யாகங்கள், சிறப்பு பூஜைகள், அன்னதானம் என பல்வேறு நிகழ்வுகள் திங்கட்கிழம வரை நடக்கிறது.

இந்த ஆண்டு புதிதாக கோசாலை அமைக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் சி.ஆர். கன்ஸ்ட்ரக்சன் கே.யு.ராஜன் கிருஷ்ணவேணி ராஜன் பாரா ஒலிம்பிக் துணைத் தலைவர் இன்ஜினியர் ஆர்.சந்திரசேகர், ஆலயம் வெல்ஃபேர் டிரஸ்ட் இயக்குனர் டாக்டர் எஸ். ஷர்மிளா சந்திரசேகர்,ஸ்ரீ வள்ளியம்மன் சோசியல் வெல்ஃபேர் டிரஸ்ட் டைரக்டர் வள்ளியம்மன் அன்பு (எ) செந்தில் பிரபு,சௌமியா லா அசோசியேட்ஸ் சௌமியா செந்தில் பிரபு உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

## ஜன.2 முதல் 12ம் தேதி வரை நடைபெறும் சமத்துவ நடைபயணத்தை முதல்வர் தொடங்கி வைக்கிறார்: வைகோ தகவல்

சென்னை, டிச.07-

மதிமுக சார்பில் ஜன.2ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடைபெறும் சமத்துவ நடைபயணத்தை திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மதிமுக சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு, சாதி மோதல் தடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி என்னுடைய தலைமையிலான சமத்துவ நடைபயணம், 2026 ஜன.2ம் தேதி முதல் 12ம் தேதி வரை 11 நாட்களுக்கு நடைபெறுகிறது.

அதன்படி 190 கி.மீ. வரை நடைபெறும் நடைபயணத்தை, திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து, இந்துக்கள் வழிபடும் கோயில், கிறிஸ்தவர்கள் வழிபடும் தேவாலயம், இஸ்லாமியர்கள் வழிபடும் மசூதி, சீக்கியர்கள் வழிபடும் குருத்வாராக்கள் அடங்கிய சின்னங்கள் பொருந்திய சிவப்பு, மஞ்சள் நிற கொடியை எனக்கு வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, மநீம கட்சித் தலைவர் கமல்ஹாசன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். சமத்துவ நடைபயணத்துக்காக மதிமுக தொண்டரணி, இளைஞரணி, மாணவரணியில் இருந்து ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.



■ மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு, நந்தா பொறியியல் கல்லூரியில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி நடைபெற்ற சமபந்தி விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உணவருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மாநிலகங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.காஞ்சன் சௌதரி உட்பட பலர் உள்ளனர்.



## மானாமதுரை வழிவிடு முருகன் கோயில் அருகில் அதல பாதாள பள்ளத்தை சரி செய்திட முன் வருமா மாவட்ட நிர்வாகம்?

சிவகங்கை, டிச.07-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பழைய பேருந்து நிலையம், ரயில்வே கேட்டை அடுத்துள்ள வழிவிடு முருகன் கோயில் அருகில் பிரதான நெடுஞ்சாலையில் அபாயகரமான கிணறு போல் காட்சியளிக்க கூடிய அதல பாதாள பள்ளம் ஏற்பட்டு, வாரத்திற்கு மேலாக சரி செய்யப்படாமல் பேரிக்காடு போடப்பட்டதோடு இருந்து வரும் அவல சூழ்நிலை நீடித்து வருகிறது. கோவில் விசேஷம், திருமண நிகழ்ச்சி என தினம்தோறும் ஆயிரக்கணக்கானோர் உபயோகிக்கும் இக்குறிப்பிட்ட பிரதான சாலையில் ஏற்பட்டுள்ள இப்பள்ளம் காரணமாக வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இரவு நேரத்தில் வாகன விபத்து ஏற்படும் சூழ்நிலை நீடிப்பதால், பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். எனவே உடனடியாக மாவட்ட நிர்வாகம், நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் தலையிட்டு நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள அதல பாதாள பள்ளத்தை சரி செய்து, விபத்து மற்றும் பெரும் அசம்பாவிதம் ஏற்படும் அபாயகரமான சூழலை தடுத்திட, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தினர்.

## மேட்டுப்பாளையம் ஊட்டி இடையே பண்டிகை கால சிறப்பு மலை ரயில்



ஊட்டி, டிச.07-

நீலகிரி மலை ரயில் 'யுனெஸ்கோ' பாரம்பரிய அந்தஸ்து பெற்றது. இதில், பயணம் செய்ய சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வம் காட்டுவதால், அவ்வப்போது சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

மேட்டுப்பாளையம் குன்னூர்ஊட்டி இடையே தலா ஒரு முறை, ஊட்டி குன்னூர் இடையே தலா 4 முறை மலை ரயில் இயக்கப்படுகிறது. கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் என தொடர் பண்டிகை கால விடுமுறையையொட்டி, மேட்டுப்பாளையம் ஊட்டி, ஊட்டிகுன்னூர் மற்றும் ஊட்டிகேத்தி இடையே சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: இம்மாதம் 25, 27, 29, 31 ஆகிய தேதிகளிலும், ஜனவரி மாதம் 2, 4, 15, 17, 23, 25 ஆகிய தேதிகளிலும் சிறப்பு மலை ரயில் இயக்கப்படுகிறது.

இந்த சிறப்பு மலை ரயில் காலை 9.10 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் இருந்து புறப்பட்டு மதியம் 2.25 மணிக்கு ஊட்டி வந்து சேரும். அதேபோல் அடுத்த நாள் ஊட்டியில் இருந்து காலை 11.25 மணிக்கு புறப்பட்டு, மாலை 4.20 மணிக்கு மேட்டுப்பாளையத்தை ரயில் சென்றடையும்.

சிறப்பு ரயிலில் முதல் வகுப்பில் 40 இருக்கைகளும், இரண்டாம் வகுப்பில் 140 இருக்கைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதை தவிர, இந்த நாட்களில் குன்னூரில் இருந்து ஊட்டிக்கு சிறப்பு ரயில்களும் இயக்கப்படும்.

மலை ரயிலில் குறைந்த தூரம் பயணிப்பவர்களுக்கு ஊட்டியில் இருந்து கேத்தி வரை டிசம்பர் 25, 26, 27, 28, 29, 30, 31 மற்றும் ஜனவரி மாதம் 1, 2, 3, 4, 16 ,17, 18, 24, 25, 26 ஆகிய நாட்களில் சிறப்பு மலை ரயில் இயக்கப்படும். இதில், 80 முதல் வகுப்பு மற்றும் 130 இரண்டாம் வகுப்பு இருக்கைகள் இருக்கும். காலை 9.45, 11.30 மற்றும் 3 மணிக்கு ஊட்டியில் இருந்து ரயில் புறப்பட்டு கேத்தி சென்றடையும், என்றனர்.

## நடுக்கடலில் கவிழ்ந்த படகு நீந்தி உயிர் தப்பிய 3 கடலூர் மீனவர்கள்

விருத்தாசலம், டிச.07-

'டிட்வா' புயல் காரணமாக கடலூர் பகுதி மீனவர்கள் கடந்த 10 நாட்களாக கடலுக்குச் செல்லவில்லை. மழை சற்றே ஓய்ந்திருந்தாலும் கடல் சீற்றம் வழக்கத்தை விட அதிகமாக இருந்ததுவந்தது.

இந்த நிலையில் கடலூர் தாழங்குடா பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் ராகவேந்திரன், திவாகர், நடராஜன் ஆகியோர் பைபர் படகு மூலம் நேற்று தாழங்குடாவில் இருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

பிற்பகல் 12 மணி அளவில்கடலில் மீன் பிடித்துக் கொண் டிருந்த போது, சூறாவளிக் காற்றுடன் கடல் சீற்றமாக காணப்பட்ட நிலையில், படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் கடலில் குதித்த அவர்கள் நீந்தியபடியே 3 பேரும் கரை திரும்பினர். ரூ.1 லட்சம் மதிப்பிலான மீன்பிடி வலை கடலில் அடித்துச் செல்லப்பட்டதாக நீந்தி தப்பி வந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

பின்னர் சக மீனவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டு, மற்றொரு படகு மூலம் நடுக்கடலில் மூழ்கிய படகை மீட்க சென்றனர்.சேதமடைந்த படகை கயிறு கட்டி கரைக்கு கொண்டு வந்தனர்.

கரையில் இருந்து 30க்கும் மேற்பட்ட மீனவர்கள் கயிறு மூலம் இழுத்து கரைக்கு கொண்டு வந்தனர்.



# திருப்பூரில் ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரின் பிறந்தநாள் விழா

திருப்பூர், டிச.07-

திருப்பூர் ஸ்ரீ வீரராகவர பெருமாள் கோவிலில் தென்னன் என்ற ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று திருமங்கை ஆழ்வார் பிறந்தநாள் மற்றும் இறந்த நாள் இரண்டும் ஒரே நாள் ஒரே நட்சத்திரத்தில் வருகிறது. இந்த விழாவில் காலம் காலமாக திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் திருமங்கையில் ஆழ்வாருக்கு, முத்தரையர் சமுதாயம் சார்பாக சிறப்பு பூஜை நடைபெற்று வருகிறது. அதே போன்று திருப்பூர் மாவட்டத்தில் உள்ள முத்தரையர் சமுதாயம் சார்பாக திருப்பூர் ஸ்ரீ வீரராகவ பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது இந்த விழாவை திருப்பூர் மாவட்ட முத்தரையர் ஒருங்கிணைப்பு குழுவினர் எடுத்து நடத்தி வருகிறார்கள். இதில் அனைத்து முத்தரையர் சங்கங்களும் முத்தரையர் பொதுமக்களும் மற்றும் அனைத்து சமுதாய பெருமக்களும் இந்த விழாவில் கலந்து கொண்டார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர். திருமங்கை ஆழ்வார்கள் சிறப்பு அபிஷேகம் அர்ச்சனை செய்யப்பட்டு ஆழ்வாரை முத்தரையர் சமுதாயத்தினர் பல்லக்கில் வைத்து கோவிலை வலம் வந்து பூஜை செய்யப்பட்ட பிறகு, வந்திருந்த அனைத்து பொது மக்களுக்கும் பிரசாதங்கள் அன்னதானமாக வழங்கப்பட்டது



■ தேனி மாவட்டம் சின்னமனூரில்அமைந்துள்ள அருள்மிகு மலையாள பகவதி அம்மன் மாரியம்மன் திருக்கோவில் உற்சவ திருவிழாவை முன்னிட்டு ஏராளமான பெண்கள் முளைப்பாரி எடுத்து ஊர்வலமாக சென்றனர்,அம்மாளுக்கு சிறப்பு அபிஷேகங்கள்மலர் அலங்காரங்கள் பச்சை தென்னங்கீற்று மற்றும் கரும்புகளை கொண்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது,அதனைத் தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெற்றது,இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை மலையாள பகவதி அம்மன் மாரியம்மன் திருக்கோவில் நிர்வாகஸ்தர்கள் செய்திருந்தனர்.



■ தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானாவில் அம்பேத்கர் அவர்களின் உருவப்படத்துக்கு, நினைவு நாளை முன்னிட்டு தென்னிந்திய ஃபார்வேர்ட் பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் அண்ணன் கே சி திருமாறன் ஜி அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்டத்தினுடைய பொதுச் செயலாளர் கம்பம் தெய்வம் அவர்கள் தலைமையில் அம்பேத்கர் அவர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தபோது உடன் தோழமைக் கட்சியான தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்ட பிரசாத் மற்றும் செயலாளர் எஸ் ஆர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்





# வள்ளியூரில் சட்ட மேதை அம்பேத்கர் நினைவு நாள் தே.மு.தி.க சார்பில் மலர் மாலை அணிவித்து மரியாதை

திசையன்விளை, டிச.07-

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 63 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வள்ளியூரில் உள்ள அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாவட்ட தேமுதிக செயலாளர் விஜி வேலாயுதம் தலைமையில், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர், திருநெல்வேலி புறநகர் மாவட்ட சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், வழக்கறிஞர் சிவகுமார் நாகப்பன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ராமச்சந்திரன் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் வள்ளியூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஜான் டேவிட், மாவட்ட கேப்டன் மன்ற துணைச் செயலாளர்கள் தர்மர் தாணுவ மூர்த்தி, மாவட்ட இளைஞரணி செயலாளர் வசந்த ராஜா, பணகுடி பேரூர் கழகச் செயலாளர் ரவி, வள்ளியூர் ஒன்றிய மகளிர் அணி செயலாளர் சுமித்ரா, ,ஏர்வாடி பேரூர் கழகச் செயலாளர் மீரான், மாவட்ட வர்த்தக அணி துணைச் செயலாளர் இளங்காமணி, மாவட்ட தொண்டரணி துணைச் செயலாளர் தியாகராஜன், வள்ளியூர் பேரூர் கழக அவை தலைவர் கனகராஜ், துணைச் செயலாளர்கள் முருகன், அருணாச்சலம், கணேசன் மற்றும் ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அலங்காநல்லூர் பெரியஊர்சேரி அம்பேத்கர் சிலைக்கு அரசியல் கட்சியினர் மரியாதை

அலங்காநல்லூர், டிச.07-



திமுகமதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில்சட்ட மாமேதை அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு திமுக சார்பில் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இதில் ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ் ,பரந்தாமன், முத்தையன், அருண், பேரூராட்சி தலைவர் ரேணுகாஈஸ்வரிகோவிந்தராஜ், மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தனுஷ்கோடி,சந்தனகருப்பு. அதிமுக தவசதீஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் அதிமுக சார்பில் ஒன்றிய எம்ஜிஆர் இளைஞர் அணி இணை செயலாளர் செந்தில்குமார், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதிபாலமுருகன், கோபால், தவமணி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தொழிலாளர் முன்னணி கேட்டுகடை அய்யா தொல்காப்பியர் ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் நிர்வாகிகள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நாம் தமிழர் கட்சியின் சார்பில் மாநில ஒருங்கிணைப்பாளர் சக்கரபாணி,மண்டல செயலாளர் சங்கிலிமுருகன், ஒன்றிய செயலாளர் திருப்பதி,சோழவந்தான் தொகுதி வேட்பாளர் நாகலட்சுமி, மற்றும் மூக்குச்சாமி, கார்த்திக், ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவி த்து மரியாதை செலுத்தினர். தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் விஜய்அன்பன் கல்லணை ஆலோசனையின் பெயரில் மதுரை வடக்கு புறநகர் செயலாளர் விஷால்கிருஷ்ணன், இணைச் செயலாளர் நடராஜ் ஒன்றிய நிர்வாகி விஜய்ஹரிஷ்,ஆகியோர் கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சி அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில் வடக்கு மாவட்ட தலைவர் ஆலத்தூர்ரவிச்சந்திரன் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட் டியின் தேசிய தலைவரும் தெலுங்கானா மாநிலபொறுப்பாளரும் விஸ்வநாதன் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அருகில் வட்டார தலைவர்கள் சுப்பாராயலு, காந்தி உள்ளிட்ட நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

ஆதித்தமிழர் பேரவை ஆதித்தமிழர் பேரவை சார்பாக மாநில பொறுப்பாளர் கபீர் நகர் கார்த்திக் மாநில பொறுப்பாளர் முத்துராமன் தோழர் மாநில மகளிரணி பொறுப்பாளர் வாசுகி மாநகர மாவட்ட பொறுப்பாளர் ஆதவன் தோழர் ஆதித்தமிழர் பேரவை மதுரை வடக்கு கிழக்கு ஒன்றிய ஒத்தக்கடை மாவட்ட பொறுப்பாளர்கள் பகலவன். இளமாறன் தோழர்,அலங்கை ஒன்றிய பொறுப்பாளர் மகளிரணி தோழர்கள் பஞ்சு. மல்லிகா செல்வி. ஒன்றிய பொறுப்பாளர் முத்து சிவா. ரவி காளிமுத்து அருணாச்சலம். சங்கிலி. மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். தமிழ் குமரன் மாவட்ட பொறுப்பாளர் ஆதி தமிழர் பேரவை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் சிந்தனை வளவன் கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை விடுதலை சிறுத்தை கட்சியின் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



■ தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட அம்பி வெங்கிடசாமி நாயுடு மக்கள் மன்றத்தில் நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கும் நிகழ்ச்சியில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருப்படத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திரு.ரஞ்ஜீத் சிங், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்





# ஒட்டன்சத்திரம் விடுதலை சிறுத்தைகள் கட்சி சட்ட மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர் 69 வது நினைவு நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை

திண்டுக்கல், டிச.07-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இடையகோட்டை பேருந்து நிலையம் முன்பாக ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட மக்களின் ஒற்றை நம்பிக்கை நாயகராகவும் வாழ்ந்த இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய69 வது நினைவேந்தல் நிகழ்ச்சி இடையகோட்டை பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது முன்னதாக வைக்கப்பட்டிருந்த திரு உருவ படத்திற்கு மலர் தூவி வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒட்டன்சத்திரம் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஒன்றிய பொருளாளர் சு வடிவேல் தலைமையில் நினைவேந்தல் செலுத்தும் நிகழ்ச்சி நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. நினைவேந்தல் நிகழ்வில் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் வீரவளவன் மற்றும் ஒன்றிய துணைச் செயலாளர் மாதவன், மகளிர் அணி செயலாளர் மீனாட்சி, இடையகோட்டை முகாம் செயலாளர் அஜய் சக்திவேல், வீரமணி, சுரேஷ்குமார், பூபதி, அழகர், பாலசுப்பிரமணி, ரவி, சந்திரன், மாம்பாறை சிவகுமார், அழகர் முத்துராமன் கட்சியின் நிறுவாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்தினார்கள்



■ நெல்லை மாநகராட்சி வண்ணார் பேட்டை காவேரி மருத்துவமனை சார்பில் மாவட்ட அளவிலான ஓவியப் போட்டி நடைபெற்றது.மாயாஜால உலகம் என்ற தலைப்பில் நடந்த போட்டியில் நெல்லை மாவட்டம் முழுவதிலும் இருந்து ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.இதில் முனைஞ்சிபட்டி குரு சங்கர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவன் கோசல்ராமுக்கு முதல் பரிசு கிடைத்தது.பரிசு பெற்ற மாணவன் கோசல்ராமை பள்ளி தலைமை ஆசிரியர் கிருஷ்ணசாமி மற்றும் ஆசிரியர்கள் பள்ளி ஓவிய ஆசிரியர் மற்றும் ஓய்வு பெற்ற ஓவிய ஆசிரியர் ஞானசேகர் ஆகியோர் பாராட்டினர்.




# ஆதிதிராவிடர் விவசாயிகள் பயிற்சியினை ரெட்டியார்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி துவங்கி வைத்தார்

திண்டுக்கல், டிச.07-

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் மாநிலத்திற்குள்ளான மூன்று நாள் ஆதிதிராவிடர் விவசாயிகள் பயிற்சியினை ரெட்டியார்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி அவர்கள் துவங்கி வைத்தார். இப்பயிற்சி தேனி சென்டேக் கே.வி.கே விற்கு விவசாயிகளை அழைத்து செல்லப்பட்டது. இப் பயிற்ச்சியில் சென்டேக் வேளாண் விரிவாக்க மைய தலைமை அலுவலர் மகேஷ்வரன் அவர்கள் ஜென்டெக் கே வி கே நிறுவனம் பற்றிய செய்திகளை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறி பயிர் செய்யும் காய் கறி பழ வகைகள் சாகுபடி முறை பற்றி எடுத்து கூறினார். டாக்டர் கார்த்திக் பாண்டி பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் அதன் பயிர் சாகுபடி முறைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார். தொழில் நுட்ப வல்லுநர் அருள்ராஜ் மண்ணியல் மண் மாதிரி எடுத்தல் அதற்கு தகுந்தார் போல் உரமிட்டு உர செலவை குறைத்தல் குறைந்த செலவில் அதிகமான மகசூல் பெரும் முறைகள் பற்றி கூறினார் . தொழில்நுட்ப வல்லுனர் ரம்யா சிவ செல்வி மனையியல் அவர்கள் வீட்டு தோட்டம் அமைத்தல் வீட்டு உபயோகப் பொருட்கள் செய்து பயன் பெறுதல் பற்றி விளக்கிக் கூறினார். வேளாண் விரிவாக்க மைய அலுவலர் சபரிநாதன் அவர்கள் விவசாயிகளின் கேள்விகளுக்கு சிறந்த முறையில் பதில் அளித்து செயல்முறை விளக்கமாக திராட்சைத் தோட்டம் மற்றும் செவ்வாழை சாகுபடி முறை , மக்காச்சோலை சாகுபடி முறை பற்றி விளக்கி கூறினார். வேளாண் அறிவியல் மைய உதவியாளர் திவ்யா அவர்கள் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தார். இப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட. வட்டார மேலாளர் மற்றும் உதவி மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்து கொடுத்தனர்.



# இராதாபுரம் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம் நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் பங்கேற்பு

நெல்லை, டிச.07-

இராதாபுரம் ஊராட்சி ஒன்றியகுழு கூட்டத்தில் நெல்லை மாவட்ட பஞ்சாயத்து மற்றும் திட்டக்குழு தலைவர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நெல்லை மாவட்டம் ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டமானது ஒன்றியக்குழு துணை தலைவர் இளைய பெருமாள் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் நெல்லை மாவட்ட பஞ்சாயத்து மற்றும் திட்டக்குழு தலைவர் ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கூட்டத்தில் புதிதாக நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள கூடங்குளத்தை சேர்ந்த மணிகண்டன் அவர்களுக்கு ஒன்றியக்குழு உறுப்பினராக பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டு அதற்கான ஆணை வழங்கப்பட்டது. மேலும் கூட்டத்தில் ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்கு தேவைப்படும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பருவமழை காலங்களில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து குளங்களிலும் முழு அளவில் நீர் நிரப்பிட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் பருவமழை காலங்களில் மேற் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்பட்டது. நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரிசெய்வதற்காக வழிமுறைகள் மற்றும் மணல் மூடைகள் தாயார் நிலையில் உள்ளனவா எனவும் கேட்டு உறுதி செய்யப்பட்டது. கூட்டத்தில் ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜா, நடராஜன், மௌலின், படையப்பா முருகன், அரிமுத்தரசு, கெனிஸ்டன், ஜெஸி, அருணா டென்சிங், சித்ரா, காந்திமதி, மணிகண்டன், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் அலெக்ஸ், சாமுவேல், ஒன்றிய பொறியாளர்கள் சிவப்பிரகாசம், உஷா, விக்னேஷ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், இந்திரா, செல்வன் மற்றும் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பரங்குன்றம் தீபத்தூண் விவகாரம் அமைச்சர் சேகர்பாபு கேள்வி



சென்னை, டிச.7-

திருப்பரங்குன்றத்தில் ஒரு இடத்தில் தீபம் ஏற்றிய பின் இன்னொரு இடத்தில் தீபம் எதற்கு என்று அமைச்சர் சேகர்பாபு கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது: திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம், சரித்திர ஆவணங்கள் படி பார்த்தால், 350 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்றப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மேலே உள்ள மலை உச்சியில் கொப்பரையில் தீபம் ஏற்றப்படுகிறது. திருவண்ணாமலை உச்சியில் தீபம் ஏற்றிய பின் மேலும் 5 இடங்களில் தீபம் ஏற்றுவோம் என்றால் எப்படி ஏற்றுக்கொள்ளுவீர்கள்.

அது போல்தான் திருப்பரங்குன்றத்திலும் ஒரு இடத்தில் தீபம் ஏற்றிய பின் இன்னொரு இடத்தில் தீபம் எதற்கு? இது தொடர்பாக வழக்குகள் பல்வேறு கட்டத்தில் நீதிமன்றங்களில் நடந்து இருக்கிறது. கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்ச்சியில் இந்தாண்டு மாத்திரம் ஒரு கோடி மக்கள் பங்கேற்று இருக்கிறார்கள்.

திருவண்ணாமலையில் 35 லட்சம் மக்கள் பங்கேற்று இருக்கிறார்கள். இந்த அரசை பொறுத்தவரை சட்டத்தை மதிக்கிற அரசு. பக்தர்கள் நலன் காக்கிற அரசு.இவ்வாறு சேகர் பாபு கூறினார்.

# சமத்துவ சமுதாயத்தை அமைப்பதே லட்சியம் முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்



சென்னை, டிச.7-

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், சமத்துவ, சமுதாயம் அமைய வேண்டும் என்பது தான் நமது லட்சியம் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடந்த அரசு நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

சமூகம் முன்னேற கல்வி தான் அடிப்படை, அதனால் கல்வியில் அதிக கவனம் செலுத்துகிறோம். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், சமத்துவ, சமுதாயம் அமைய வேண்டும் என்பது தான் நமது லட்சியம்.

முக்கியத்துவம்

ஆட்சிப்பொறுப்பு என்பது நமது லட்சியங்களை திட்டங்கள் மூலமாக வென்றெடுப்பதற்கான வழி. அதனால் தான் நம் ஆட்சி அமையும் போதெல்லாம், விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து, வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்து அவர்களுக்கு உறுதுணையாக விளங்கி வருகிறோம். மாணவர்கள் பட்டப்படிப்போடு நிறுத்தி விட்டாமல் ஆராய்ச்சி படிப்பையும் படிக்க வேண்டும். ஆதிதிராவிடர் மாணவர்களின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

மைல்கல்

ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்கு ஏராளமான திட்டங்களை திராவிட மாடல் அரசு நிறைவேற்றியுள்ளது. ஆண்டாண்டு காலமாக சமூகத்தில் இருந்த தடைகளை உடைத்து முன்னேறுகிறோம். அடுத்து எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நமது முன்னேற்றத்துக்கான மைல்கல்களாக அமையும். அரசு திட்டங்களின் பயன் தேவையான நபர்களுக்கு கிடைக்க வேண்டும் என நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# ஜெயலலிதா நினைவிடத்திற்கு 'பவுன்சர்'கள் சூழ வந்த பெண்



சென்னை, டிச.7-

'நான் ஜெயலலிதாவின் மகள்' என கூறி வரும், பெங்களூருவை சேர்ந்த ஜெயலட்சுமி, ஜெயலலிதா நினைவிடத்திற்கு, பவுன்சர்களுடன் நேற்று வந்து, மக்களுக்கு பணம் வழங்கினார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பின், அவரது மகள் என கூறி, சிலர் தங்களை பொதுவெளியில் அறிமுகம் செய்து கொண்டனர். அதில், ஜெயலட்சுமியும் ஒருவர்.

இவர் ஜெயலலிதாவை போல் உடை அணிந்து, ஜடை பின்னி தனக்கென ஒரு கூட்டத்தை சேர்த்துக் கொண்டு, அவ்வப்போது அரசியல் கருத்துகளை தெரிவித்து வருகிறார்.

கடந்த லோக்சபா தேர்தலின்போது, டில்லி சென்றார். பின், 'எம்.ஜி.ஆர்., அம்மா திராவிட முன்னேற்றம் கழகம்' என்ற கட்சியை துவக்கி இருப்பதாகவும், அதை தேர்தல் கமிஷனில் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

ஜெயலலிதாவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்திற்கு, ஜெயலட்சுமி வருகை தந்தார்.

ஜெயலலிதாவை போலவே தன்னை காட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே, தன்னுடன் 10 பவுன்சர்களையும் அவர் அழைத்து வந்தார். காரில் இருந்து பவுன்சர்கள் பாதுகாப்புடன் நினைவிடம் சென்று மரியாதை செலுத்தினார். பின்னர், அங்கிருந்தவர்களுக்கு தலா 100 ரூபாய் வழங்கினார்.

# இண்டிகோ விமானம் ரத்தானதால் ஆன்லைன் மூலம் 'ரிசப்ஷனில்' பங்கேற்ற புதுமண ஜோடி



பெங்களூரு, டிச.7-

இண்டிகோ விமானம் திடீரென ரத்து செய்யப்பட்டதால் புதுமண ஜோடி திருமண வரவேற்பில் ஆன்லைன் மூலம் கலந்து கொண்டது வைரலானது.

பெங்களூருவை சேர்ந்த மென்பொருள் பொறியாளர் மேதா சாகருக்கும் (29) ஒடிசாவின் புவனேஸ்வரை சேர்ந்த சங்கமா தாஸ் (26) என்ற பெண்ணுக்கும் கடந்த நவம்பர் 23ம் தேதி புவனேஸ்வரில் திருமணம் நடைபெற்றது. கடந்த 3ம் தேதி கர்நாடகாவின் ஹூப்பள்ளியில் புதுமண தம்பதியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்காக மேதா சாகரும் சங்கமா தாஸும் கடந்த 2ம் தேதி புவனேஸ்வரில் இருந்து பெங்களூரு வழியாக ஹூப்பள்ளி செல்வதற்காக இண்டிகோ விமானத்தில் முன்பதிவு செய்தனர். முதலில் விமானம் 6 மணி நேரம் தாமதம் என அறிவிக்கப்பட்ட நிலையில், நீண்ட காத்திருப்புக்குப் பிறகு விமானம் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் புதுமண ஜோடியால் திட்டமிட்டபடி ஹூப்பள்ளிக்கு செல்ல முடியவில்லை.

இருப்பினும் அங்குள்ள உறவினர்களும், நண்பர்களும் மண்டபத்தில் குவிந்தனர். இதையடுத்து மணமகனின் தந்தை சேகர் தாஸ் சாகர், புதுமண ஜோடிகளை ஆன்லைன் மூலமாக திருமண வரவேற்பில் பங்கேற்குமாறு கூறினார். உடனடியாக மண்டபத்தில் பெரிய அளவில் 2 திரைகள் அமைக்கப்பட்டு, ஆன்லைன் வீடியோ கான்பரன்சிங் மூலம் புதுமண ஜோடிகள் தங்களின் திருமண வரவேற்பில் புத்தாடை அணிந்து பங்கேற்றனர்.

மணமக்களுக்காக போடப்பட்டிருந்த இருக்கைகளில் அவர்களது பெற்றோர் அமர்ந்து சடங்குகளைச் செய்தனர். இதை தொடர்ந்து மணமக்களை உறவினர்களும், நண்பர்களும் ஆன்லைன் மூலமாக வாழ்த்தினர்.

திரையில் தோன்றிய மணமக்களுடன் உறவினர்கள் நின்றவாறு புகைப்படமும் எடுத்துக்கொண்டனர். ஜிபே, ஃபோன் பே போன்ற செயலிகள் மூலமாக மொய் பணம் அனுப்பியதுடன், இன்ஸ்டா மார்ட், பிளிங்கிட் இன் போன்ற செயலிகள் மூலம் பரிசு பொருட்களை ஆர்டர் செய்து அனுப்பினர். இந்த திருமண வரவேற்பின் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி, வைரலாகியுள்ளன.

# தமிழகத்தில் தேஜ கூட்டணி ஆட்சி; ராமர் ஆட்சி மலர வேண்டும்: நயினார் நாகேந்திரன்



சென்னை, டிச.7-

"அயோத்தி மாதிரி தமிழகம் வருவதில் தப்பு ஏதுமில்லை. தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி, ராமரின் ஆட்சி மலர வேண்டும்" என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: வரும் தேர்தலில் தேஜ கூட்டணி வெற்றி பெற வேண்டும் என அம்பேத்கர் நினைவு தினத்தில் சபதம் ஏற்கிறோம். அயோத்தி இந்தியாவில் தான் இருக்கிறது. அயோத்தி மாதிரி தமிழகம் வருவதில் தப்பு ஏதுமில்லை.

ராமர் ஆட்சியின் பற்றி கேள்வி பட்டு இருக்கிறோம். தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி, ராமரின் ஆட்சி மலர வேண்டும். திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டும். அங்கே பக்கத்தில் தர்கா இருக்கிறது எல்லாருக்கும் தெரியும்.

ஆனால் நீதிபதி தீர்ப்பு என்ன சொல்லி இருக்கிறார் என்றால் அந்த தர்கா கிட்ட போகாமல் தீபத்தூணில் தீபம் ஏற்றுவதற்கு தான் அனுமதி கொடுத்து இருக்கிறாங்க. இன்னும் சொல்ல போனால், தீர்ப்பிற்கு தர்காவினர் ஒருவர் கூட எதிர்ப்பு சொல்லவில்லை.

கனிமொழி, துணை முதல்வருக்கு என்ன பாதகம் இருக்கிறது. துணை முதல்வர் உதயநிதி ஜனநாயகத்தை அழித்துவிடுவோம் என்று சொல்லி இருக்கிறார். ஆனால் அதற்கு ஆரம்ப கட்ட வேலையில் அவர் ஈடுபடுகிறார் என்று நினைக்கிறேன். அவர்களுடைய கனவு பலிக்காது.

எத்தனை ஆண்டுகள் ஆனாலும் சனாதன தர்மத்தை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. 2021ம் ஆண்டு மானியக் கோரிக்கையில் மதுரை, கோவை மெட்ரோ திட்டத்தை சேர்த்து இருக்கிறார்களா? தூத்துக்குடியில் ரூ.350 கோடியில் விமான நிலையம் கட்டி இருக்கிறார்களா? மதுரையில் இருந்து கொழும்பு, சிங்கப்பூருக்கு விமானம் இருக்கிறது.

இதில் என்ன வளர்ச்சி திட்டம் இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். கூட்டணிக்கு நாள் இருக்கிறது. 100 நாட்கள் இருக்கிறது. திமுக ஆட்சி காலம் 100 நாட்கள் எண்ணப்படுகிறது. கூட்டணிக்கு நிறைய கட்சிகள் வரும். நிச்சயமாக தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

# 'இந்தியா தான் எங்கள் முக்கிய கூட்டாளி நாடு': அமெரிக்கா அறிவிப்பு



வாஷிங்டன், டிச.7-

அமெரிக்கா வெளியிட்டுள்ள புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையில், இந்தியாவை 'முக்கிய கூட்டாளி' நாடாக அறிவித்துள்ளது. மேலும், வர்த்தகம், பாதுகாப்பு, தொழில் நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில், இந்தியாவுடன் இணைந்து செயல்படுவோம் எனவும் அறிவித்துள்ளது.

2025 26 ஆண்டுக்கான புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையை, அதிபர் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இதில், இந்தியாவை முக்கிய கூட்டாளி நாடாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறியதாவது: உலக பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு நிலைத்தன்மை, தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றில் இந்தியா முக்கிய சக்தியாக உள்ளது. அதனால், இந்தியாவுடன் நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது, அமெரிக்காவின் பாதுகாப்பு குறிக்கோளில் முக்கிய அங்கமாக உள்ளது.

இந்தியாவின் வளர்ச்சியையும், தொழில்நுட்ப திறன்களையும், மிகச்சிறந்த சக்தியாக அமெரிக்கா மதிப்பிடுகிறது. இந்தோ பசுபிக் பகுதியில் சீனாவின் விரிவாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்தியா அமெரிக்கா இணைந்து செயல்படுவது, அந்த பகுதியின் பாதுகாப்பு அமைப்பில் முக்கியத் தூணாக இருக்கும்.

பாதுகாப்பு, வர்த்தக ஒத்துழைப்பு:

ராணுவப் பயிற்சிகள், கடல் பாதுகாப்பு கண்காணிப்பு, புதிய தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் பாதுகாப்பு முதலீடுகள் உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்பட உள்ளன. மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், தொழில்நுட்ப பரிமாற்றம், பாதுகாப்புக் கருவிகள் மேம்பாடும் அதிகரிக்க உள்ளன.

ஆயுதத் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இந்தியா அமெரிக்க கூட்டணி பலமாக மாற உள்ளது. எதிர்கால பாதுகாப்பு சவால்களை சமாளிக்க, இணைந்த செயல் திட்டம் உருவாக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ரஷ்ய அதிபர் புடின் அரசு முறை பயணமாக இந்தியா வந்து சென்றுள்ள நிலையில் இவ்வாறு அமெரிக்கா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# விமான துறையில் தாராளமயமாக்கல் இல்லாததே இண்டிகோ பிரச்சினைக்கு காரணம்: ப. சிதம்பரம்



புதுடெல்லி, டிச.7-

இந்திய விமான துறையில் தாராளமயமாக்கல் இல்லாததே விமான நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அடிப்படை என்று ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் கடந்த சில நாட்களாக விமானப் பயணிகள் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். இந்நிலையில், இந்த பிரச்சினையின் அடிப்படை குறித்து காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் நிதி அமைச்சருமான ப. சிதம்பரம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஒரு துறையில் ஒரு நிறுவனம் மட்டுமோ அல்லது இரண்டு நிறுவனங்கள் மட்டுமோ ஆதிக்கம் செலுத்துவது இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்குப் பொருந்தாது. இதை ராகுல் காந்தி சரியாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய பொருளாதாரத்தில் பல துறைகளில் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் போக்கு இருக்கிறது. இதில், விமானத்துறையும் ஒன்று.

தாராளமயமாக்கலும் திறந்த பொருளாதாரமும் போட்டியை அடிப்படையாகக் கொண்டவை. போட்டி இல்லாவிட்டால், நாம் தற்போது காண்பது போன்ற மோசமான விளைவுகள்தான் ஏற்படும். இந்தியாவில் துடிப்பானதாகவும் போட்டிகள் கொண்டதாகவும் இருந்த விமானத் துறை, எவ்வாறு இரண்டு நிறுவனங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் துறையாக மாறிப் போனது என்பது குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்த விவகாரம் குறித்து நேற்று தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட ராகுல் காந்தி, "பாஜக தலைமையிலான மத்திய அரசு, ஏகபோகமாக ஒரு நிறுவனத்தின் ஆதிக்கத்தில் விட்டதன் விளைவுதான் இது. அதனால் விமானங்கள் ரத்து, தாமதம் என அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அப்பாவி மக்கள் அதற்கான விலையை கொடுக்கின்றனர். நாட்டில் எந்த துறையாக இருந்தாலும், ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். ஒரு நிறுவனமே ஆதிக்கம் செலுத்தும் வகையில் இருக்க கூடாது. இதில் மேட்ச் பிக்சிங் இருக்க கூடாது" என தெரிவித்திருந்தார்.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் டிச.11 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, டிச.7-

தமிழகத்தில் நாளை முதல் டிச.11ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (டிச.6) முதல் டிச.11 ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்யக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதும் இல்லை: தமிழக கடலோரப் பகுதிகள் மற்றும் வங்கக்கடல் பகுதிகளில் டிச.9ம் தேதி வரை மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதும் இல்லை. தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் 9 செமீ, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தில் தலா 7 செமீ,

செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர், சென்னை புழலில் தலா 6 செமீ, சென்னை உத்தண்டி, திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தில் தலா 5 செமீ, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, செங்குன்றம், கள்ளக்குறிச்சி மாவட்டம் திருப்பாலபந்தல், கடலூர் மாவட்டம் பெலாந்துறையில் தலா 4 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# "அதிமுக ஆட்சி 2026ல் மலர்ந்ததும் தீபம் ஏற்றப்படும்" திருப்பரங்குன்றம் எம்எல்ஏ ராஜன் செல்லப்பா உறுதி



மதுரை, டிச.7-

2026ல் அதிமுக ஆட்சி மலர்ந்ததும் திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றப்படும் என்று அதிமுக அமைப்புச் செயலாளரும், திருப்பரங்குன்றம் எம்எல்ஏவுமான வி.வி.ராஜன் செல்லப்பா கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: மதுரைக்கு திமுக அரசு எந்த திட்டத்தையும் கொண்டுவரவில்லை. தற்போது முதல்வர் திடீரென மதுரையின் வளர்ச்சி பற்றி பேசுவது வியப்பளிக்கிறது. திருப்பரங்குன்றத்தில் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றுவதை மக்கள் யாரும் தடுக்கவில்லை. திமுக அரசுதான் காவல்துறையை வைத்து தடுத்திருக்கிறது. மக்கள் ஒற்றுமையை சீர்குலைக்கப் பார்க்கின்றனர்.

நீதிமன்ற உத்தரவுப்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதாகக் கூறும் காவல்துறை, தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதித்த உயர் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாததற்கு காரணம் என்ன? மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியை திமுக மேற்கொள்கிறது.

திமுகவின் மத அரசியல் ஒருபோதும் வெற்றி பெறாது. மக்களின் மத உணர்வுகளை கெடுக்க முயற்சிக்கும் திமுக அமைச்சர்கள், அரசுக்கு அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். 2026ல் பழனிசாமி தலைமையில் அதிமுக ஆட்சிக்கு வரும். அப்போது திருப்பரங்குன்றத்தில் ஒளி (தீபம்) ஏற்றப்படும். இவ்வாறு அவர் கூறினார்

# யாருடைய ஓட்டும் கிடைக்காது: தி.மு.க.,வுக்கு பா.ஜ., சாபம்



சென்னை, டிச.7-

சென்னையில் நேற்று, தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை அளித்த பேட்டி:

திருப்பரங்குன்றத்தில், தீப தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்கு அனுமதி கொடுப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தர்கா அருகில், 15 மீட்டர் தள்ளி தீபம் ஏற்றி கொள்வதில், தங்களுக்கு பிரச்னை இல்லை என்று, ஏற்கனவே இஸ்லாமியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அதற்கு மாறாக, திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று புதிய பெயர் வைக்கின்றனர்; அதை தி.மு.க., அரசு ரசிக்கிறது. மதுரையில் கலவரத்தை ஏற்படுத்துவது போலீசார் தான்.

தர்காவை சேர்ந்தவர்கள் மேல்முறையீடு செய்யவில்லை. கோவில் செயல் அலுவலர் மேல்முறையீடு செய்கிறார். மதுரை மக்களின் மனநிலையைத்தான் பா.ஜ., பிரதிபலிக்கிறது.

அங்குள்ள ஜமாத், பொது சொத்துக்கு தீ வைத்தனரா, இஸ்லாமியர்களை யாராவது தவறாக பேசினரா; அப்படி இருக்கும்போது, மதக்கலவரம் என்று எப்படி சொல்ல முடியும்?

நீதித்துறையின் மாண்பை குறைத்து, சட்ட துறை அமைச்சரே தவறாக பேசியுள்ளார்.

சிறுபான்மையினரை தாஜா செய்யும் அரசியலை, தி.மு.க., கையில் எடுத்துள்ளது. நீதிபதிக்கு எதிராக, அங்குள்ள ஜமாத் மக்களை வர சொல்கின்றனர்; பேரணி செல்ல வேண்டும் என்று கூறுகின்றனர். 'போஸ்டர்' அடித்து ஒட்டுகின்றனர்.

நீதிமன்றத்தில் முறுகை போராட்டம் நடத்துவதாக அறிவித்திருந்தது. இதற்காக, ஒரு நபரையாவது கைது செய்தனரா?தி.மு.க., அரசு தாஜா செய்யும் மத அரசியலை கையில் எடுத்துள்ளது.

'மைனாரிட்டி' ஓட்டுக்களை, லட்டு மாதிரி, சிந்தாமல் சிதறாமல் பெற வேண்டும் என்று, தி.மு.க., நினைக்கிறது. இதை இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் விரும்பவில்லை.

மொத்தத்தில் யாருடைய ஓட்டும் தி.மு.க.,வுக்கு கிடைக்கப் போவதில்லை; தி.மு.க., நடுத்தெருவில் நிற்க போகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000